**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்**

**முன்னிலை - திருமதி. பி. வித்யா, எல்.எல்.எம்.,**

**நீதித்துறை நடுவர், செஞ்சி,**

**2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 06 ஆம் நாள் திங்கட் கிழமை**

**ஆண்டு பட்டியல் வழக்கு எண்.167/2017**

**CNR.No. TNVP18-000401-2017.**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime Number of the Offence) | காவல் ஆய்வாளர்,<br>வளத்தி காவல் நிலையம்,<br>குற்ற எண். 76/2017. |
| 2. | எதிரியின் பெயர் (Name) | 1. வெங்கடேசன் **(இறந்துவிட்டார்)**<br>த.பெ. பிச்சாண்டி,<br>நத்தம், இரட்டைவாடை தெரு,<br>வடுகசாத்து, ஆரணி வட்டம்,<br>திருவண்ணாமலை மாவட்டம்.<br>2. பாலாஜி,<br>த.பெ. களத்துமேட்டு கோவில் தெரு,<br>கொசப்பாளையம், ஆரணி டவுன், ஆரணி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். |
| 3. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரியின் முகவரி (Residence) | |
| 6. | எதிரியின் வயது (Age) | |
| 7. | Details of obsondance of the accused | --- |
| 8. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 27.03.2017 |
| 9. | புகார் தேதி (Complaint) | 27.03.2017 |
| 10. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | 28.03.2017 |
| 11. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on Bail) | A1 – 11.04.2017<br>A2 – 04.04.2017 |
| 12 | Period of Bail | A1 – 18 நாட்கள்<br>A2 – 8 நாட்கள் |
| 13 | Commitment | --- |

<table>
<tr><td>14</td><td>Date of Questioning u/s 228 (or) 240 (or) 246 (or) 251</td><td>18.12.2017</td></tr>
<tr><td>15</td><td>விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி<br>( Commencement of Trial)</td><td>13.11.2018</td></tr>
<tr><td>6</td><td>Date of Examination in Chief and Cross Witnesses</td><td>
<table>
<tr><td></td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>13.11.2018</td><td>14.03.2019</td></tr>
<tr><td>PW2</td><td>22.04.2019</td><td>22.04.2019</td></tr>
<tr><td>PW3</td><td>27.05.2019</td><td>27.05.2019</td></tr>
<tr><td>PW4</td><td>20.11.2019</td><td>20.11.2019</td></tr>
<tr><td>PW5</td><td>02.12.2021</td><td>02.12.2021</td></tr>
<tr><td>PW6</td><td>19.11.2025</td><td>19.11.2025</td></tr>
<tr><td>PW7</td><td>18.03.2026</td><td>18.03.2026</td></tr>
<tr><td>PW8</td><td>15.04.2026</td><td>15.04.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>17</td><td>விசாரணை முடிக்கப்பட்டது தேதி<br>(Closure of Trial)</td><td>15.04.2026</td></tr>
<tr><td>18</td><td>Date of examination of accused<br>u/s. 313 Crpc.</td><td>27.04.2026</td></tr>
<tr><td>19</td><td>தண்டனை அல்லது உத்தரவு</td><td>20.05.2026</td></tr>
<tr><td>20</td><td>Details of Victim Compensation Order</td><td>---</td></tr>
<tr><td>21</td><td>Grant of Stay by Superior Courts and their Results.</td><td>---</td></tr>
<tr><td>22</td><td>எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள்</td><td>2-ம் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 392, 170-ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>23</td><td>சட்டப்பிரிவுகள்</td><td>இ.த.ச. பிரிவுகள் 392, 170</td></tr>
<tr><td>24</td><td>தீர்ப்புரை</td><td></td></tr>
</table>

இந்த வழக்கானது கடந்த 15.11.2017-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இறுதியாக 20.05.2026 - ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்காக வந்தபோது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 செஞ்சி அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ராஜவேலு, B.A., B.L., அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்தும், இருதரப்பிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள், பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்புரை</u>

**<u>அரசு தரப்பு வழக்கு</u> :-**

கடந்த 27.03.2017- ம் தேதி 16.00 மணிக்கு மேல்மலையனூர் அக்னிகுளக்கரையில் எதிரிகள் இருவரும் TN 25 AS 2340 – Hero HF Delux என்ற இருசக்கர வாகனத்தில சிறுதலைபூண்டி சென்றவர்கள் திடீரென பிரேக் போட்டு சாட்சி-1(குமார்) என்பவரின் மேல்பாக்கிட்டிலிருந்து 1ம் எதிரி ரூ.200/- வழிப்பறி செய்தும், 2ம் எதிரி சாட்சி-2(வெங்கடேசன்) என்பவரின் சட்டை பாக்கெட்டில் இருந்தும் ரூ.200/-யை வழிப்பறி செய்தும், பிடிக்க முயன்ற 1, 2, 3 சாட்சிகளை எதிரிகள் இருவரும் தங்களை போலீஸ்காரர்கள் என்று பொய் சொல்லியும், பிடிக்க முயன்றால் கொன்றுவிடுவோம் என்றும் கொலை மிரட்டல் விடுத்த குற்றங்களுக்காக 1 மற்றும் 2 எதிரிகளின் மீது இ.த.ச. பிரிவு 379, 170, 506(i)-ன் கீழ் தண்டிக்கதக்க குற்றம் புரிந்ததாக வளத்தி காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்பு கு.வி.மு.ச. 207-வது பிரிவின் படி வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

**<u>3. குற்றச்சாட்டுகள்</u> :-**

1-ம் எதிரி இறந்துவிட்டபடியால் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அற்று

போய்விட்டது என நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வழக்காவணங்களின் அடிப்படையில் 2-ம் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 392, 170-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு

குற்றச்சாட்டு 2ம் எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கப்பட்டு குற்றத்தை ஒத்துக்கொள்ளுகிறீரா? அல்லது விசாரணையை வேண்டுகிறீரா? என வினவப்பட்டது. எதிரி குற்றச்சாட்டை மறுத்தார்.

எனவே, அரசு தரப்பில் சாட்சிகளை ஆஜர் படுத்தப்படவேண்டுமென்று உத்தரவிடப்பட்டது.

**4. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் பின்வருமாறு</u>:-**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கபட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.1 (குமார்)** இவ்வழக்கின் சம்பவத்தை பற்றியும், புகார் கொடுத்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் மூலம் **அ.சா.ஆ.1 (புகார் மனு), அ.சா.ஆ.2(புகார் மனுவில் உள்ள அ.சா.1-ன் கையெழுத்து), அ.சா.பொ.1 (பணம் ரூ.400/-)** ஆகியவைகள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.6 (வெங்கடேசன்)** இவர் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சி ஆவார்.

**அ.சா.2 (மணி)** இவர் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாவார்.

**அ.சா.3 (பூரணகிருஷ்ணன்), அ.சா.4 (அண்ணாமலை)** இவர்கள் இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்தது குறித்த சாட்சியாவார்கள்.

**அ.சா.5 (ஏழுமலை), அ.சா.7(கோபிநாத்)** இவர்கள் இவ்வழக்கில் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியாவார்கள். மேற்படி அ.சா.5 மற்றும் அ.சா.7-ன் மூலமாக பார்வை, கைப்பற்றுதல் மகசர், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அவர்களது கையொப்பங்கள் வரிசை முறை அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.8 (ஞானசேகர் - ஆய்வாளர்)** இவர் இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். இவர் மூலம் **அ.சா.ஆ.9 (முதல் தகவல் அறிக்கை), அ.சா.ஆ.10 (பார்வை மகஜர்), அ.சா.ஆ.11 (மாதிரி வரைபடம்), அ.சா.ஆ.12 (கைப்பற்றுதல் மகஜர்), அ.சா.ஆ.13 (ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி), அ.சா.ஆ.14 (படிவம் 91), அ.சா.ஆ.15 (சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை)** ஆகியவைகள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. **அ.சா.பொ.2 (கருப்பு நிற லாவா செல்போன்), அ.சா.பொ.3 (வெளிர் நீலம்- வெள்ளை City cell போன் ஒன்று) மற்றும் அ.சா.ஆ.4 ( TN 25 AS 2340- கருப்பு நிற Hero Delux வாகனம் ஒன்று)** ஆகியவைகள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு தரப்புகள் விசாரிக்கப்பட்ட பின்பு, அவர்களது சாட்சியத்தில் 2ம் எதிரிக்கு பாதகமான பகுதிகள் குறித்து, கு.வி.மு.ச. 313(1)(ஆ) பிரிவின் படி வினவிய போது எதிரி அந்த சாட்சியங்களை மறுத்தார்.

**5. எதிரிகள் தரப்பு வழக்கு:-**

அவர் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்பது எதிரி தரப்பு வழக்கு. ஆனால், எதிரி அவர் தரப்பில் எந்த வித சாட்சியங்களும் இல்லை என குறிப்பிட்டார்.

**6. இருதரப்பு வாதங்கள் :-**

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள்

அவருடைய வாதத்தில், அ.சா.1 (குமார்) இவ்வழக்கின் புகார்தாரர் என்றும், அவர் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் வழக்கை அரசு தரப்பு நிரூபித்துள்ளதாகவும், எனவே எதிரிகளை தண்டிக்குமாறு வாதிட்டார்.

எதிரிகள் தரப்பில், வாதிடும் போது, குற்றத்தை யார் புரிந்தார் என்பதை அரசு தரப்பு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் படி நிருபிக்க தவறியதால், எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிக்கமாறு வாதிடப்பட்டது.

**7. தீர்வுக்குரிய பிரச்சனை:-**

**(அ) எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபித்துள்ளதா?**

**(ஆ) ஆம், எனில், எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?**

**8. தீர்வு: -**

**(8.1)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அ.சா.1 (குமார்) இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். மேற்படி அவர் அளித்த புகார் மனுவின் அடிப்படையில், எதிரியின் மீது அ.சா.ஆ.9 (முதல் தகவல் அறிக்கை) பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சம்பவத்தை பொறுத்து புகார் மனுவை பரிசீலனை செய்ததில் கடந்த 27.03.2017 அன்று மாலை சுமார் 04.00 மணியளவில் அ.சா.1 மேல்மலையனுார் அம்மாவாசை ஊஞ்சல் ஊர்சவ பாதுகாப்பு பணியில் குற்ற தடுப்பு நடவடிக்கையாக சாதாரண உடையில் மேல்மலையனுார் அக்னி குளம் கரையில் அவரும் அ.சா.2 (மணி) என்பவரும் ரோந்து பணியில் இருந்த போது எதிரிகள் இருவரும் TN 25 AS 2340 என்ற இருசக்கர வாகனத்தில் வந்து அதில் ஒரு எதிரி அ.சா.1-ன் சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.200/-ஐ பறித்துக் கொண்டதாகவும், அருகில் கோவிலுக்கு வந்த பக்தரான அ.சா.6(வெங்கடாசலம்) என்பவரிடமிருந்து மற்றொரு எதிரி

ரூ.200/- பறித்துக் கொண்டதாகவும், அவர்களை அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் தடுக்க முற்பட்டபோது அவர்களை கொன்றுவிடுவோம் என மிரட்டி விட்டு, தப்பித்து சென்றுவிட்டதாகவும், பின்பு எதிரிகளை சிறுதலைபூண்டி சாலையில் மடக்கி பிடித்ததாகவும், பின்பு அவரை கைது செய்து நடவடிக்கை எடுக்குமாறு புகார் மனு அளிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**(8.2)** வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் எதிரிகளின் மீது 392, 170-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

**(8.3)** வழக்கு சம்பவத்தை பொறுத்து அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் அவர்களது முதல் விசாரணை சாட்சியத்தை புகார் மனுவை ஒத்துரைக்கும் வகையில் சாட்சியம் அளித்துள்ளனர். குறுக்கு விசாரணையின் போதும் அவர்களது முதல் விசாரணை சாட்சியத்தை ஒத்துரைக்கும் வகையில் தான் சாட்சியம் அளித்துள்ளனர். எனினும், மேற்படி இரண்டு சாட்சிகளும் காவலர்கள் என்பதால் அவர்களின் சாட்சியத்திற்கு ஒத்துரைப்பு சாட்சியம் அவசியமாகிறது. புகார் மனுவின் படி அ.சா.6-னிடமிருந்து எதிரிகள் ரூ.200/-ஐ பறித்துள்ளனர். எனவே, அவரது சாட்சியத்தை பரிசீலனை செய்ததில் அவர் அவரது முதல் விசாரணை சாட்சியத்தில் கடந்த 2017-ம் வருடம் ஒரு நாள் அவர் மேல்மலையனூர் கோவிலுக்கு குடும்பத்துடன் சென்று இருந்ததாகவும், அன்றைய தினம் மாலை சுமார் 05.00 மணியளவில் அவர் கோவிலில் இருந்த போது அவரது மேல் சட்டையில் வைத்திருந்த பணம் ரூ.400/- காணாமல் போயிருந்தது என்றும், அதனை யார் எடுத்தார்கள் என்பது தெரியவில்லை என்றும், கோவிலில் இருந்த காவலர்களிடம் மேற்படி விபரத்தை கூறியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.6-ன் இந்த சாட்சியமானது அரசு தரப்பு வழக்குடனும் மற்றும் அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களின் சாட்சிகளுடன் ஒத்து

காணப்படவில்லை. மேற்படி அ.சா.6 அரசு தரப்பால் பிறழ்சாட்சியாக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்கு விசாரணையின் போதும் அவர் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி அ.சா.6-ன் சாட்சியமானது அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்களுக்கு முரண்பட்டு காணப்படுவது அவர்களின் சாட்சியங்களின் மீது சந்தேகத்தை எழுப்புகிறது.

**(8.4)** இவ்வழக்கில் 1ம் எதிரி தாமாக முன்வந்து அ.சா.5(ஏழுமலை) மற்றும் அ.சா.7(கோபிநாத்) ஆகியோர்கள் முன்னிலையில் வளத்தி காவல் நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அரசு தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இரு சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்ததில் அவர்கள் அவர்களது முதல் விசாரணை சாட்சியத்தில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பங்கள் அவர்களுடையது என்று ஒப்புக் கொண்டுள்ளனர். எனினும், அவ்விரு சாட்சிகளும் எதிரி அவர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி சாட்சிகள் எதிரி தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர். குறுக்கு விசாரணையின் போது அ.சா.6 அவரது சாட்சியத்தில் பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.7 அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் காவலர்கள் அவர் முன்னிலையில் எதிரியிடமிருந்து எந்த பொருட்களையும் கைப்பற்றவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.5 மற்றும் அ.சா.7 ஆகியோர்களின் சாட்சியங்களிலிருந்து 1ம் எதிரி அவர்கள் முன்னிலையில் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்பதும் அதன் அடிப்படையில் எதிரிகளிடமிருந்து

அவர்கள் முன்னிலையில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை என்பதும் புலப்படுகிறது. மேற்படி அ.சா.5 மற்றும் அ.சா.7 ஆகியோர்களின் சாட்சியங்களும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்களுக்கு முரண்பட்டு காணப்படுகிறது மற்றும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்களின் மீதான சந்தேகத்தை வலுபெற செய்கிறது. எனவே, அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்களின் மூலம் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்க தவறியுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**(8.5)** குற்ற வழக்குகளை பொறுத்த மட்டில் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பு அனைத்து வித சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்க வேண்டும். இவ்வழக்கில் தொடர்புடைய வழக்கு சொத்தை எதிரிகள் தான் வழிபறி செய்தனர் என்பதையும், அவைகள் எதிரிகளிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டது என்பதையும் அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறியுள்ளது. எனவே, 2 ம் எதிரியின் மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு நிரூபிக்க தவறியுள்ளதாக தீர்மானித்து சந்தேகத்தின் பலனை 2 ம் எதிரிக்கு அளிக்க இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக** - 2 ம் எதிரி இ.த.ச பிரிவு 379, 170-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச 248(1) - வது பிரிவின் கீழ் விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும், எதிரிகள் இந்நீதிமன்றத்திற்கு எழுதி கொடுத்திருக்கும் பிணைமுறி ஆவணங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்தாகி விடும் என்றும் இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**9. சொத்து பற்றிய ஆணை :-** இவ்வழக்கில் சி.பி எண்.61/2017 – ல் உள்ள அ.சா.பொ.1 (பணம் ரூ.400/-) ஐ மனுதாரர் / அ.சா.1 நீதிமன்றத்தில் மனு செய்து இடைக்கால பொறுப்பில் பெற்று

சென்றுள்ளார் என்பதும், திரு.பிச்சாண்டி த/பெ. சின்னசாமி என்பவர் அ.சா.பொ.4 (TN 25 AS 2340- கருப்பு நிற Hero Delux) வாகனத்தை நீதிமன்றத்தில் மனு செய்து இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றுள்ளார் என்பதும் புலப்படுகிறது. மேற்படி வழக்கு சொத்து அவர்களுக்கு சொந்தமானது அல்ல என்றோ அவற்றை திரும்ப தரும்படி யாரும் இந்நீதிமன்றத்தில் இது நாள் வரையில் மனு செய்யவில்லை. அது தொடர்பாக அரசு தரப்பிலும் மற்றும் எதிரிகள் தரப்பிலும் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எனவே, மேற்குறிப்பிட்ட வழக்கு சொத்து மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அவர்களிடமே இருக்க உத்தரவிடப்படுகிறது. அ.சா.பொ.2 (கருப்பு நிற லாவா செல்போன்) மற்றும் அ.சா.பொ.3 (வெளிர் நீலம்- வெள்ளை City cell போன்) ஆகியவற்றை இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அதன் உரிமையாளர்கள் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்று கொள்ளுமாறு உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 06 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இத்தீர்ப்பு என்னால் பகிரப்பட்டது.

B VIDHYA Digitally signed by B VIDHYA Date: 2026.07.04 17:25:02 +0200

நீதித்துறை நடுவர்,

செஞ்சி

**<u>பின் இணைப்பு</u>:**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:**

அ.சா.1 - திரு. குமார் (புகார்தாரர்)

அ.சா.2 - திரு. மணி

அ.சா.3 – திரு.பூர்ணகிருஷ்ணன்

அ.சா.4 – திரு.அண்ணாமலை

அ.சா.5 - திரு. ஏழுமலை

அ.சா.6 - திரு. வெங்கடாச்சலம்

அ.சா.7 - திரு. கோபிநாத்

அ.சா.8 - திரு. ஞானசேகர் (ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

அ.சா.ஆ.1 - புகார் மனு

அ.சா.ஆ.2 புகார் மனுவில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம்

அ.சா.ஆ.3 – கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம்

அ.சா.ஆ.4 – பார்வை மகசரில் மகஜரில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம்

அ.சா.ஆ.5 – ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம்

அ.சா.ஆ.6 – கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.7 ன் கையொப்பம்

அ.சா.ஆ.7 – பார்வை மகசரில் மகஜரில் உள்ள அ.சா.7 ன் கையொப்பம்

அ.சா.ஆ.8 – ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.7 ன் கையொப்பம்

அ.சா.ஆ.9 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.10 – பார்வை மகசர்

அ.சா.ஆ.11– மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.12 - கைப்பற்றுதல் மகஜர்

அ.சா.ஆ.13 -ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி.

அ.சா.ஆ.14 – படிவம் 91

அ.சா.ஆ.15 – சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை.

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :-**

அ.சா.பொ.1 – பணம் ரூ.400/-

அ.சா.பொ.2 – கருப்பு நிற Lava செல்போன் ஒன்று.

அ.சா.பொ.3 – வெளிர்நீலம் மற்றும் வெள்ளை நிறம் கொண்ட City செல்போன்.

அ.சா.பொ.4 - TN 25 AS 2340 என்ற நீலம் கருப்பு நிற Hero HF Delux இருசக்கர வாகனம்.

**எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** :- இல்லை

**எதிரிகள் தரப்பு சான்றுபொருள் : -** இல்லை.

B VIDHYA
Digitally signed by B VIDHYA
Date: 2026.07.04 17:24:55 +0200

நீதித்துறை நடுவர்,
செஞ்சி

**குறிப்பு-**

1. வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.
3. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.